# பாடம் 9 : சோதோம் மற்றும் கொமோரா (ஆதி 18-17)

ஆபிரகாம், தேவனின் சிநேகிதன். கர்த்தர் தான் செய்யப் போவதை ஆபிரகாமிடம் மறைக்க விரும்பவில்லை. ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் ஒரு மகன் பிறப்பான் என்பதை அறிவித்த பின்னர், கர்த்தரின் தேவதூதர்கள் சோதோம் பட்டணத்தை நோக்கி அதை அழிப்பதற்காக நடந்து போனார்கள். தேவன் ஆபிரகாமை பார்த்து "சோதோம் மற்றும் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடியதாயிருப்பதினாலும், நான் இறங்கிப் போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின் படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ, இல்லையோ என்று பார்த்து அறிவேன்" என்றார்.

தேவனும் ஆபிரகாமும் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கையில், அந்த இரண்டு புருஷர்கள் அவர்களைக் கடந்து, சோதோமை நோக்கி போனார்கள். ஆபிரகாம் தேவனை நோக்கி "துன்மார்க்கனோடே நீதிமானை அழிப்பீரோ? பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருந்தால், அந்த ஐம்பது நீதிமான்கள் நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ? துன்மார்க்கனோடே நீதிமானையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக. சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பீரோ?'' என்றான்.

அதற்கு கர்த்தர் ''நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலம் முழுவதையும் இரட்சிப்பேன்" என்றார்.

அப்பொழுது ஆபிரகாம் சிறிது நேரம் யோசித்து விட்டு, "இதோ தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத் துணிந்தேன். ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு பதில் அதிலே ஐந்து பேர் குறைவாய் இருந்தால் அதன் நிமித்தம் பட்டணம் முழுவதையும் அழிப்பீரோ?" என்றான்.

அதற்கு கர்த்தர் "நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால் அதை அழிப்பதில்லை'' என்றார். தொடர்ந்து அவர்களுடைய பேச்சுவார்த்தை நாற்பத்தி ஐந்துலிருந்து 40, பின்னர் 30, அதன் பின்னர் 20 எனச் சென்றது. ஒவ்வொரு முறையும் தேவன் தன்னுடைய சிநேகிதனின் பரிந்து பேசுதலை அங்கீகரித்தார்.

கடைசியாக ஆபிரகாம், 'நான் இன்னும் ஒரு விசை மாத்திரம் பேசத் துணிகிறேன். "பத்து நீதிமான்கள் மாத்திரம் அங்கே காணப்பட்டால்?" என்றான். "பத்து நீதிமான்கள் நிமித்தம் அந்தப் பட்டணத்தை அழிப்பதில்லை" என்று தேவன் கூறினார். இத்துடன், அவர்கள் பேச்சு வார்த்தை முடிவடைந்தது. கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடித்த பின்பு போய் விட்டார். ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான்.

சோதோம், ஒரு முதன்மை பட்டணமும், செல்வச் செழிப்பும், மிகுந்த ஜனத்தொகை கொண்ட இடமும், சவக்கடலின் தெற்கே அமைந்ததுமாகும். ஆராய்ச்சி வல்லுநர்கள் அந்தப் பகுதியை ஆய்வு செய்ததில் அங்கிருந்த பட்டணங்கள் எல்லாம் 4,000 ஆண்டுகளுக்கு முன்னதாக நெருப்பினால் அழிக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். இயேசுவின் காலத்தில், அந்த இடத்தை சுற்றியுள்ள பகுதிகள் தண்ணீரால் சூழப்பட்டிருப்பதை நேரடியாய் கண்டதாக ஜோசபஸ் எழுதியுள்ளார். ஆனால் இன்று அந்தப் பகுதிகள், பல மீட்டர் தூரம் தண்ணீரால் சூழப்பட்டு இருந்த போதிலும் ஏரி முழுவதும் சல்ப.்.ர் மற்றும் உப்பினால் நிறைந்தும் எந்த உயிரினங்களும் வாழ தகுதியற்றதுமாய் உள்ளது.

அந்த இரண்டு தூதரும், சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள். லோத்து சோதோம் பட்டணத்தின் வாசலிலே உட்கார்ந்திருப்பதை அவர்கள் கண்டார்கள். முற்காலத்திலே பட்டணத்தின் வாசலிலே உட்கார்ந்து தான் வியாபாரத்தை நடத்துவார்கள். லோத்து மிகுந்த ஐசுவரியவானாய் இருந்ததால், சோதோமிலே மிகுதியாய் வியாபாரம் செய்தான். தேவதூதர்களை லோத்து கண்ட உடனே தரை மட்டும் குனிந்து "அடியேன் உங்கள் வேலைக்காரன், தயைகூர்ந்து எங்கள் வீட்டு முகமாய்

நீங்கள் திரும்பி உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போக வேண்டும்'' என்றான்.

அதற்கு அவர்கள் "அப்படியல்ல வீதியிலே இராத்தங்குவோம்" என்றார்கள். 'இல்லை நீங்கள் இப்பொழுதே என் வீட்டிற்கு வர வேண்டும்" என லோத்து அவர்களை வருந்தி அழைத்ததின் பேரில், அவர்கள் அவன் வீட்டிற்குள்ளே பிரவேசித்தார்கள். அவன், அவர்களுக்கு புளிப்பில்லா அப்பங்களைச் செய்து விருந்து பண்ணினான். பிறகு அவர்கள் படுக்கும் முன்னே, சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர் முதல் கிழவர் மட்டுமுள்ள ஜனங்கள் அவன் வீட்டை சூழ்ந்து கொண்டு 'உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டு வா' என்று லோத்திடம் கூச்சலிட்டனர்.

லோத்து வாசலுக்கு வெளியே வந்து, தனக்குப் பின்னாலே கதவைப் பூட்டி, அவர்களிடத்தில் போய், "சகோதரரே அக்கிரமம் செய்ய வேண்டாம். இந்த புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்களுக்கு பதிலாக என் இரண்டு குமாரத்திகளை தருகிறேன்" என்றான். அவன் மிகவும் கடினமான சூழ்நிலையில் செய்வதறியாது திகைத்து நின்றான். ஏனெனில் அந்தநாட்டு வழக்கத்தின்படி வீட்டிற்கு வருகிறவரை பாதுகாக்க வேண்டியது அந்த குடும்பத் தலைவரின் கடமை. அவனுடைய இரண்டு விருந்தினர்கள் பாதுகாக்கப்பட இந்த கலகக்காரர்களின் கூட்டத்தை அவனால் எவ்வாறு மேற்கொள்ள முடியும்.

அந்த கூட்டத்தினர் மிகவும் கோபமடைந்து 'அப்பாலே போ பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? நீ எங்களைச் சேர்ந்தவன் அல்ல. இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப் பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்பைச் செய்வோம்!' என்று சொல்லி, லோத்தை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள். அப்பொழுது அந்தப் புருஷர்கள் தங்கள் கைகளை நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு, கதவைப் பூட்டினர். மேலும் அவர்கள் தெருவாசலிலிருந்த சிறியோரும் பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணியதால் அவர்கள் வாசலைத் தேடித்தேடி அலுத்துப் போனார்கள்.

பின்பு அந்த புருஷர் லோத்திடம் திரும்பி, 'இவ்விடத்தில் இன்னும் யார் உனக்கு இருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்குரிய எவர்களாவது இருந்தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு போ. நாங்கள் இந்த பட்டணத்தை அழிக்கப் போகிறோம்' என்றார்கள்.

அப்போழுது லோத்து புறப்பட்டு தன் குமாரத்திகளை விவாகம்பண்ணப் போகிற தன் மருமக்கள் மாரோடே பேசி, 'நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள். கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப் போகிறார்'' என்றான். அவன் வருந்தி அழைத்தாலும், அவர்கள் பரியாசம் பண்ணுகிறதாகக் நினைத்து செல்லவில்லை.

கிழக்கு வெளுக்கும் போதும் லோத்து பட்டணத்தை விட்டு வெளியேறாமல் இருந்தான். "சீக்கிரம்! நீயும் உன் குடும்பமும் விரைவாக வெளியேறுங்கள் இல்லையென்றால் வரும் நியாயத்தீர்ப்பிலே நீங்களும் அழிந்து போவீர்கள்" என்று புருஷர்கள் அவனை துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக் கொண்டிருக்கும் போது, கர்த்தர் அவன் மேல் வைத்த இரக்கத்தினாலே அந்த புருஷர்கள், மீண்டுமாக ''உன் ஜீவன் தப்ப ஓடிப்போ" என்று எச்சரித்தனர்.

உடனே லோத்து "உமது கண்களில் அடியேனுக்கு கிருபை கிடைத்தது. ஆனால் அந்த மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது. அருகிலே ஒரு சிறிய ஊர் இருக்கிறது. என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடி போகட்டும்" என்றான்.

அந்த புருஷர் தூரத்தில் இருக்கும் அந்த ஊரைப் பார்த்து, 'தீவிரமாய் அங்கே ஓடித் தப்பித்துக் கொள். நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக் கூடாது" என்றான். இந்த விஷயத்தில் கர்த்தர் லோத்திற்கு ஆபிரகாமின் ஜெபத்தின் நிமித்தம் அநுக்கிரகம் செய்தார்.

லோத்து அந்த சிறிய ஊருக்குள் வரும் போது பூமியின் மேல் சூரியன் உதித்தது. அவன் அந்தச் சிறிய பட்டணத்திற்கு உள்ளே நுழைந்த உடனே கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப் பண்ணி, அந்தப் பட்டணங்களையும், அந்த சம பூமியனைத்தையும் அதின் எல்லாக் குடிகளையும் பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார். லோத்தும் அவன் குடும்பமும் இருந்த சிறிய பட்டணம் மட்டுமே காக்கப்பட்டது. துரதிருஷ்டவசமாக லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து தேவதூதர்களின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனதால் உப்புத்தூண் ஆனாள்.

விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய், சோதோம், கொமோரா பட்டணங்களின் திசையையும் சம பூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான். அப்போது பூமியின் அடர்ந்த புகை, சூளையின் புகையைப் போல் வானத்திற்கு எழும்பியதை பார்த்தான். தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப் போடுகையில், லோத்தையும் அவன் இரண்டு குமாரத்திகளையும், அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப் போகும்படி அனுப்பி விட்டார்.

சோதோம் அழிந்த பின்னர் லோத்தும் அவன் குமாரத்திகளும் அந்த சிறிய ஊரை விட்டு, மலையின் ஒரு கெபியிலே குடியிருந்தார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பிலே அவர்களுடைய எல்லா உடைமைகளும் அழிந்தது. அவர்களிடத்தில் மீதமாயிருந்தது அவர்களால் கையில் கொண்டு வரப்பட்டவை மட்டுமே. லோத்து தான் தப்புவிக்கப்பட்டத்திற்கு நன்றியுள்ளவனாய் ஆபிரகாமிடத்திற்கு திரும்பி செல்லாமல் பயத்துடன் அந்த குகையிலே தங்கி விட்டான்.

மேலும் கர்த்தரை தேடுவதையும் தவிர்த்து தன் நம்பிக்கையில்லாத சூழ்நிலையை மாற்றிக் கொள்ள மறுத்து விட்டான். இதுவே அவனுக்கும் லோத்தின் குமாரத்திகளுக்கும் நம்பிக்கையற்ற சோதனை காலமாக அமைந்து விட்டது. இந்த தேசத்தின் விகிதத்தின்படி பிள்ளைகள் அவர்கள் பெற்றோரை வயது முதிர்ந்த காலத்தில் பராமரிக்க வேண்டும். இதுவே லோத்தின் குமாரத்திகளுக்கும் அவனை பராமரித்து பாதுகாக்கும் பொறுப்பாய் அமைந்தது. ஆனால் அவர்களுக்கோ, வேலை செய்து ஆகாரத்தை புசிக்க கொடுக்க கணவன் இல்லாதிருந்தான். தகப்பனின் எல்லா ஆஸ்தியும் போய் விட்டதால் மேற்கொண்டு வரதட்சணை கொடுத்து மணமகன்களை கொள்ளவும் முடியவில்லை. இன்னும் மிக மோசமாக அமையும் வண்ணம், அவர்கள் வயது சென்ற காலத்தில் பராமரிக்கப்படுவதற்கு அவர்களிடம் பிள்ளைகள் இல்லை. அவர்கள் என்ன தான் செய்வார்கள்?

பொதுவாக பிள்ளைகள் பெரிய பணக்காரனாகிய தன் உறவினர் ஆபிரகாமிடம் போக வேண்டும் என்று தான் நினைத்திருப்பார்கள். அவர்களுக்கு நல்ல மணமகன்களை தேர்வு செய்து அவர்கள் வாழ்க்கையை புதுப்பித்துக் கொள்வதற்குத் தேவையான பொருள் வசதி அவனிடம் இருந்தது. ஆனால் இந்த இரண்டு குமாரத்திகளோ, பாவம் நிறைந்த பட்டணத்தில் வளர்க்கப்பட்டனர். அந்த பட்டணம் தாம்பத்திய உறவு மிகவும் சாதாரணமாக நடக்கும் இடம். அதினாலே அவர்களுடைய பிரச்சினைக்கு அதை தவறாக தெரிந்து கொண்டனர்.

லோத்தின் குமாரத்திகள் சோதோமில் வாழ்வது மட்டுமல்லாமல் அந்த பட்டணத்தின் மக்களின் தீய யோசனையும் கடைப்பிடித்தனர். ஒரு இரவிலே தங்கள் தகப்பனுக்கு மதுவைக் அதிகமாய், அவர் சுயநினைவை இழக்கும் வரை குடிக்க கொடுத்தார்கள். மூத்தவள் போய் அவனுடனே படுத்துக் கொண்டாள். அவன் குடியில் வெறிகொண்டவனாய் இருந்ததினால் தன் மகளிடமே சயனித்தோம் என்ற உணர்வு இல்லாமல் இருந்தான். அடுத்த நாள் இரவிலே, தங்கள் தகப்பனுக்கு மறுபடியுமாக மதுவைக் குடிக்க கொடுத்து இளையவள் அவனுடன் படுத்துக் கொண்டாள். இவ்விதமாய் தகப்பனின் மூலமாக அவர்கள் இருவரும் கர்ப்பம் தரித்தார்கள். ஆனால் இது தேவனின் குடும்பத்தை குறித்த திட்டத்திற்கு விரோதமான காரியமாய் இருந்தது. மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்றாள். அவன் இந்நாள் வரைக்கும் இருக்கிற மோவாபியருக்குத் தகப்பன். இளையவளும் ஒரு குமாரனைப் பெற்றாள். அவன் இந்நாள்

வரைக்கும் இருக்கிற அம்மோன் புத்திரருக்குத் தகப்பன். இவர்கள் இருவரின் சந்ததியும் இரண்டு தேசமாகப் பிரிந்தது. பின்னர் 500 ஆண்டுகள் சென்ற பிறகு தேவன் ஆபிரகாமிற்கு தருவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை சென்றடையும் வழியிலே மிகுந்த இடையூறாய் இருந்தார்கள்.

இதில் மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், லோத்து தேவனை அறிந்திருந்தும், அவன் நீதிமானாக எண்ணப்பட்டிருந்தும், சோதோமின் பாவத்தினிமித்தம் அதிகமாய் துக்கப்பட்டவனாக இருந்தும், அவனுடைய ஒரு சந்ததியும் தேவனை அறிந்திருந்தனர் என வேதாகம வரலாற்றில் 500 ஆண்டுகள் வரை எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் தேவனின் நியாயத்தீர்ப்பையும் கிருபையையும் அவர் எவ்வாறு பாவிகள் மீது வெளிப்படுத்துகிறார் என்பதை காட்டுகின்றது. உலகத்தில் நடக்கிறது என்ன என்று அவருக்குத் தெரியும். ஆபிரகாம் சோதோமின் இழந்துபோன ஆத்துமாக்களுக்காக பரிந்து பேசியிருந்தாலும் கர்த்தர் அவர்களையும் நியாயந்தீர்த்திருக்கவே சமீபமாயிருந்தார். கர்த்தர் லோத்தின் மீதும் அவன் குடும்பத்தின் மீதும் கிருபை பாராட்டினாலும் அவர்கள் பல வருடம் அந்த பாவம் நிறைந்த பட்டணங்களில் வாழ்ந்ததினால் பாதிக்கப்பட்டார்கள்.

இந்த பாடத்தின் சத்தியம் என்னவென்றால் தேவன் தம் ஜனங்களின் மீது அன்பு வைத்து அவர்கள் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என விரும்புகிறார். ஏனென்றால் அவர்கள் தனக்கு கீழ்ப்படிய வேண்டும் என எதிர்பார்க்கிறார். பாவங்களுக்கு பின் விளைவு உண்டு. அவைகளை உடனே பார்க்க முடியவில்லை என்றாலும் காலப்போக்கில் நம்மால் உணர முடியும்.

இந்த பாடத்தை நாம் திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதில் அளியுங்கள்.

1) தேவனுடைய நீதியுள்ள நியாயாதிபதியாயிருக்கிற குணாதிசியத்தை குறித்து ஆபிரகாம் அறிந்திருந்த சத்தியம் என்ன?(6 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)
   ‘‘சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பீரோ?’’ என்று ஆபிரகாம் கூறினான் என நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2) கர்த்தர் சோதோமிற்கு இரண்டு தூதர்களை ஏன் அனுப்பினார்? (6 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)
   ‘‘பாவத்தின் மிகுதியால் கர்த்தர் அந்த பட்டணங்களை அழிக்க அவர்களை அனுப்பினார்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்

3) லோத்தின் மனைவி உப்புத் தூணாக மாறினது ஏன்? (6 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)
   தூதர்களின் கட்டளைகளுக்கு கீழ்படியாமல் அவள் திரும்பிப் பார்த்ததினால் உப்புத்தூண் ஆனாள். என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

   இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்த பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை பற்றி அறியாத ஒரு நபரிடம் இந்த சம்பவத்தை கூறவும். லோத்தின் மனைவிக்கு, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சோதோமை விட்டு செல்வதா? அல்லது தன் சுய விருப்பத்தின்படி அங்கேயே தங்குவதா? என்பதை முடிவு செய்ய முடியவில்லை. அவளுடைய முடிவு எடுக்க முடியாத நிலை துன்மார்க்கரோடு மரிக்க அவளை வழி நடத்தியது. ஏன் அவளை தேவன் மரிப்பதற்கு அனுமதித்தார் என நினைக்கிறீர்கள்?. லூக்கா 17:32 - லே இயேசு நம்மை லோத்தின் மனைவியை நினைவு கூர்ந்து பார்க்க செய்கிறார்.

நம்முடைய இருதயம் உலக சிற்றின்பங்களாலும் ஆஸ்திகளாலும் வசீகரிக்கப்பட அனுமதிக்க கூடாது. ஏனெனில் அவை நம்மை மரணத்திற்கும், அழிவிற்கும் நேரே வழி நடத்தும்.

பாடம் முடிந்தது